முற்பகல் 11-05

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 670 கிராமிய நூற்பு மையங்களுக்கு மேலாக, இந்த ஆண்டு மேலும் கூடுதலாக 25 கிராமிய நூற்பு மையங்கள் அமைப்பதற்கு வாரியத்தின் மூலம் ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, முதல் நடவடிக்கையாக, மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை நமது தமிழகத்திற்கு அடையாளம் காட்டிய பர்கூர் தொகுதியில் 6 கிராமிய நூற்பு மையங்களை அமைப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து அனைத்து தொகுதிகளிலும், இதுபோன்ற கிராமிய நூற்பு மையங்களை அமைப்பதற்கு வாரியம் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

59—

ராதாபுரம் தொகுதியிலுள்ள உவரியை சுற்றுலா மையமாக்கும் திட்டம்.

***24526—திருமதி ரமணி நல்லதம்பி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ராதாபுரம் தொகுதி, உவரியை சுற்றுலா மையமாக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உவரியை மாவட்ட உலாத்தலமாக அரசு அறிவித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு-** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]